# ECHO OF HIS CALL

## அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-


India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXXI YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 APRIL No. 04


## *பரிசுத்த வேதாகமம்*



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 148:7-14

7. பூமியிலுள்ளவைகளே கர்த்தரைத் துதியுங்கள்; மகாமச்சங்களே, கர்த்தரைத் துதியுங்கள்.

8. அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே,

9. மலைகளே, சகல மேடுகளே, கனி மரங்களே, சகல கேதுருக்களே,

10. காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே,

11. பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே,

12. வாலிபரே, கன்னிகைகளே, முதிர் வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்.

13. அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக் கடவர்கள்; அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது; அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது.

14. அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.

# கர்த்தரின் அமைதியான தருணங்கள் உங்களுக்காக செயல்படுகின்ற நேரங்கள்!

சகோதரி ஏஞ்சலின்



நமது ஆண்டவரும், இரட்சகருமான உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், **அழைப்பின் எதிரொலி** குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். என் சொந்த வாழ்க்கையில் கர்த்தர் என்ன பேசி வருகிறார் என்றும் எப்படி இடைபடுகிறார் என்றும் பகிர்ந்து கொள்வது எப்போதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நான் எழுதுவது நீங்கள் விசுவாசத்தில் முன்னேற உங்களை ஊக்குவிக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் சரி ஜெபிக்கவும். ஏனென்றால், தேவன் எனக்காக செய்ததை, நிச்சயமாக உங்களுக்காகவும் செய்வார். இந்த வார்த்தைகளால், நாம் ஒருவரையொருவர் ஊக்குவித்து வாழ்க்கைப் பாதையில் வெற்றியோடு முன்னேறுவோம்!

**அவர் உயிர்த்தெழுந்தார்!**

'அவர் உயிர்த்தெழுந்தார்!' என்பது என்ன ஒரு சக்தி வாய்ந்த பிரகடனம்! இதுதான் நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடித்தளமாகும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையை நாம் தியானிக்கும்போது, நீங்கள் தொடர்ந்து படிக்கும்போது அவர் உங்கள் சூழ்நிலைகளில் இடைபடுவாராக!

புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் பற்றிய சரித்திரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இன்னும், உலகத்தோற்றத்துக்கு முன்பே முன்னறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு மொழிகளில்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு - காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள்! பிறருக்கும் Share பண்ணுங்கள்!!

ECHO OF HIS CALL - (Marching towards 60th year)
Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார். – நியாயாதிபதிகள் 10:16.



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
Ex MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.
EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே !

இயேசு ஆண்டவர் மிகவும் நல்லவர் ! அவர் இன்றும் உயிரோடு இருக்கிறார். அவர் உங்களைக் கொண்டு ஏதோ ஒரு புதிய காரியத்தை செய்யத் தீர்மானித்து, அவர் வழியில் உங்களை நடத்துகிறார். உங்கள் வாழ்க்கைப் பாதையில் நீங்கள் நிலை தடுமாறும்போது அவர் தமது கரத்தை உங்களுக்கு நேராக நீட்டி தூக்கி நிறுத்துவார். மட்டுமின்றி, உங்கள் வாழ்க்கையில் நடந்து விட்ட சில வருத்தமான நிகழ்வுகளை நினைத்து வருந்தி தேவாதிதேவன் உங்கள்மேல் மனதுருகுகிறார். எனவே, பயப்படாதேயுங்கள். உங்களுக்கான விடுதலையின் நாட்கள் நெருங்கி வருகின்றன.

*இஸ்ரவேல் புத்திரர், மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்து, கர்த்தரைச் சேவியாமல் அவரை விட்டுப் போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும் அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவித்தார்கள்.* – நியாயாதிபதிகள் 10:6

இஸ்ரவேல் மக்கள் ஆண்டவரின் பிடியிலிருந்து வெளியேறி, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பு செய்து, கர்த்தரை சேவியாமல், அவரை விட்டுப்போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவித்தார்கள்.

தேவன் அவர்களைக் கைவிட்டார். இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்பட்டார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டு தேவனிடம் திரும்பினார்கள்.

*அம்மோன் புத்திரர் யூதாவின்மேலும், பென்யமீன்மேலும், எப்பிராயீம் குடும்பத்தார்மேலும் யுத்தம்பண்ண யோர்தானைக் கடந்துவந்தார்கள்; இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்பட்டார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டு: உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நாங்கள் எங்கள் தேவனைவிட்டு, பாகால்களைச் சேவித்தோம் என்றார்கள்.* – நியாயாதிபதிகள் 10:9,10.

தேவன் இஸ்ரவேல் மக்களின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார். மகாபெரிய வெற்றியை அனுபவித்தார்கள்.

*அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்.* – நியாயாதிபதிகள் 10:16.

நீங்களும், அப்படியே தேவனிடம் திரும்புங்கள். உங்கள் துன்பப் பாதையில் நீங்கள் மாத்திரம் அல்ல, உங்கள் தகப்பனாகிய தேவனும் வருத்தப்படுகிறார். மனிதர்கள் உங்கள் பாடுகளைப் புரிந்து கொள்ள முடியாது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களோடு இருக்கிறார். சோர்ந்து போகாதிர்கள். தைரியமாயிருங்கள். உங்களுக்கும் ஒரு அசாதாரணமான அற்புதத்தை தேவன் செய்யப் போகிறார் !

கர்த்தரின் கிருபையால், **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** ஊழியங்கள் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுகின்றன. நமது மெய்யான தேவனுடைய வழிகாட்டுதலுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்** தற்போது **Nations Association for Theological Accreditation (NATA)** ன் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த குறிப்பிடத்தக்க சாதனை நமது

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ▫ BIBLECOR - Postal Courses (3 languages) ▫ YouTube Ministry ▫ Online Courses ▫ Theological Correspondence Courses (2 languages) ▫ Church Planting ▫ Nehemiah Bible Colleges ▫ Gospel Printing Press ▫ Great Commission Partners ▫ St. Paul's Matriculation School ▫ Crusades ▫ Community Development



**1996–1998 வருட கல்வியாண்டில் படித்த முன்னாள் மாணவர் கனத்துக்குரிய தேவஊழியர் ஸ்ரீகுமார் அவர்கள், ஏகாங்கிபுரம் *(Egangipuram)* மற்றும் இப்போதைய சேப்பாக்கம் நெகேமியா வேதாகமக் கல்லூரி மாணவர்கள்**

கல்லூரிகளின் கல்வித்தரங்களை வலுப்படுத்துவதிலும் நமது ஊழியத்தை விரிவுபடுத்துவதிலும் ஒரு முக்கியமான சாதனையைக் குறிக்கிறது.

மேலும் நடப்பு கல்வியாண்டில், இறையியல் இளங்கலை **(B.Th.)** என்ற புதிய பாடத்திட்டத்தை நாங்கள் தொடங்கியுள்ளோம். இந்தப் புதிய பாடத்திட்டம் மாணவர்களுக்கு சிறந்த வேதாகம அறிவு, ஆழமான இறையியல் புரிதல் மற்றும் கள ஊழியப்பயிற்சி அளிப்பதன் மூலம் அவர்கள் மிகவும் திறமையுடன் செயல்படுவதற்காக வடிவமைக்கப்பட்டது.



**நெகேமியா வேதாகமக் கல்லூரி – மகாபலிபுரத்தில் சிறப்பு மாணவர் கூடுகை**

ஜனவரி 24–ம் தேதி, மகாபலிபுரத்தில் ஒரு சிறப்பு மாணவர் கூடுகையை நடத்தினோம். ஆவிக்குரிய முன்னேற்றத்தை ஊக்குவிக்க நடத்தப்பட்ட இந்த கூட்டத்தின் போது, பாஸ்டர் சாமுவேல் ஆரோன் அவர்கள் 'கிறிஸ்துவுடனான நெருக்கம்' என்ற கருப்பொருளில் தேவனின் வார்த்தையைப் பிரசங்கித்தார்கள். இந்த கூட்டத்தில் வழங்கப்பட்ட தேவசெய்திகள் ஆழமாகப் போதிக்கும் வகையில் இருந்தன. மேலும் அர்த்தமுள்ள ஐக்கியம், உற்சாகமூட்டும் ஆராதனை மற்றும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் நமது மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு அவர்கள் பலப்படுத்தப்பட்டனர்; ஊக்குவிக்கப்பட்டனர்.

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** ஊழியங்களுக்காக உங்களின் தொடர்ச்சியான ஜெபங்களை வேண்டுகிறோம். வரவிருக்கும் இந்த புதிய கல்வியாண்டில் ஏராளமான புதிய மாணவர்களை ஆசீர்வதிக்கவும், இக்கல்லூரிகள் தொடர்ந்து கர்த்தருடைய மகிமைக்காக செயல்படவும் உங்களுடைய ஜெபத்தை வேண்டுகிறோம்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் சகோதரரான,**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இது மனித வரலாற்றில் மிகப்பெரிய நிகழ்வாகவே உள்ளது. வரலாற்று ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் இது உலகம் முழுவதும் உள்ள இருதயங்களைத் தொடர்ந்து ஆட்கொண்டு வருகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நிகழ்வுகள் பெரும்பாலும் மூன்று நாட்களாக இருக்கின்றன. அவையாவன:

புனித வெள்ளி, அமைதியான சனிக்கிழமை மற்றும் உயிர்த்தெழுதலின் ஞாயிறு!

புனித வெள்ளியைப் பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். உயிர்த்தெழுதல் நிகழ்ந்த ஞாயிற்றுக் கிழமையைப் பற்றியும் அதிகம் பேசுகிறோம்; கொண்டாடுகிறோம். ஆனால் இவ்விரண்டிற்கும் நடுவாக இருக்கும் சனிக்கிழமையைப் பற்றி நாம் ஒன்றுமே பேசுவதில்லை. ஏன்? வேதாகமம் அந்த சனிக்கிழமை பற்றிய விஷயங்களில் பெரும்பாலும் மௌனமாக இருப்பதால், நான் அதை 'அமைதியான சனிக்கிழமை' என்று குறிப்பிட விரும்புகிறேன். எந்த குறிப்பிடத்தக்க நிகழ்வும் பதிவு செய்யப்படவில்லை; அது மௌனமாக இருக்கிறது. மேலும் அதில் காணக்கூடிய எந்த செயல்பாடுகளும் இல்லை.

இன்னும் (சனிக்கிழமை வரை) இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருப்பதாக பலர் கற்பனை செய்கின்றனர்; சீடர்களுக்கு இது ஒரு வேதனையான நினைவூட்டல்:

- உடைந்த வாக்குத்தத்தத்தின் வேதனை
- தண்டனை மற்றும் அவமானத்தின் இடம்
- தோல்வி மற்றும் வீழ்ச்சியின் காட்சி
- திரும்ப எழ முடியாத நிலை

புனித வெள்ளி நம் மனதை உடைக்கிறது. உயிர்த்தெழுதலின் ஞாயிறு நம்மை உயர்த்துகிறது. ஆனால், அமைதியான சனிக்கிழமை நம்மை உருவாக்குகிறது.

அது எதுவும் நடக்காதது போல் தோன்றும் நாள்; ஆனால் எல்லாம் நடந்து கொண்டே இருக்கும் நாள்.

தேவன் மௌனமாக இருக்கும் நாள்; ஆனாலும் அவருடைய திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நாள்.

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
**10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India**
**Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org**

ஒரு செயலும் நடைபெறாத நாளாக உலகம் பார்க்கும்; ஆனால் பரலோகம் அதின் கிரியையைக் காணும் நாள் ஆகும்.

## 1. சனிக்கிழமை – நாம் புரிந்துகொள்ளாத நாள்!

**மூன்று நாளைக்குப் பின்பு நான் உயிர்த்தெழுந்திருக்கவேண்டியதென்று** இயேசு கிறிஸ்து மாற்கு 8:31–ல் தெளிவாகச் சொன்னாலும், வெள்ளிக்கிழமையின் பேரதிர்ச்சி வாக்குத்தத்தத்தை மூழ்கடித்தது.

சனிக்கிழமை என்பது:

- தேவன் மறைந்திருப்பதாக கருதப்பட்ட நாள்
- ஜெபங்களுக்கு பதிலளிக்கப்படவில்லை எனத் தோன்றும் நாள்
- விசுவாசம் பலவீனமாக உணரப்பட்ட நாள்

சீஷர்கள் மிகவும் மனமுடைந்திருந்தார்கள். இயேசு இறந்து விட்டார். அவர்களின் கனவுகளும், விசுவாசங்களும், நம்பிக்கைகளும் சுக்குநூறாக்கப்பட்டு அவருடன் புதைக்கப்பட்டிருந்தன. இது அவர்களின் எஜமானருக்கே இந்த நிலை என்றால், அவர்களுக்கு என்ன நடக்கும்? அந்த சனிக்கிழமை காலை வேதனை, துக்கம், பயம் மற்றும் குழப்பத்தால் நிறைந்திருந்தது. அவர்கள் மனம் உடைந்து போய் பயந்து, அவர்கள் பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தனர்.

நம்மில் பலர் நம்முடைய இம்மாதிரியான 'சனிக்கிழமைகளில்' உலகத்திலிருந்து நம்மை நாமே விலக்கிக் கொண்டு பயந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் நீங்கள் இருப்பீர்களானால் இந்த செய்தி உங்களுக்கானது!

இயேசு அவர்களின் பூட்டிய அறைக்குள் நுழைந்து, 'சமாதானம்' என்ற ஒரே வார்த்தையைக் கூறினார்.

அதே சமாதானம், உங்கள் அமைதியான சனிக்கிழமையின் மேல் தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தையாக இருக்க நான் ஜெபிக்கிறேன்.



இயேசு 'உங்களுக்குச் சமாதானம்' என்றார்.

***... சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவில் நின்று, 'உங்களுக்குச் சமாதானம்' என்றார்.*** யோவான் 20:19.

யோசேப்பு தேவனிடமிருந்து கனவுகளைப் பெற்றார். ஆனால், ஒரு குழியிலும் பின்னர் சிறையிலும் தள்ளப்பட்டார். ஒரு சத்தமும் இல்லை. ஒரு விளக்கமும் இல்லை. ஒரு தெளிவும் இல்லை. ஆனால், தேவன் உண்மையில் தனது நோக்கத்திற்காக அவரை நிலைநிறுத்த திரைக்குப் பின்னால்



**தேவனின் அமைதிக்குப் பின் நடந்த அற்புதம்!**

கிரியை செய்து கொண்டிருந்தார்.

இஸ்ரவேலர் செங்கடலுக்கு முன்பாக நின்றபோது, அவர்களுக்குப் பின்னால் பார்வோனும் இருபுறமும் மலைகளும் இருந்தபோது பயமும், சந்தேகமும் அவர்களை மூழ்கடித்தது.

**தேவன் மௌனமாக காணப்பட்டார். ஆனாலும், அந்த அமைதியில், அவர் ஒரு அற்புதத்தைத் நிகழ்த்த ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.** (யாத்திராகமம் 14:13–14)

இத்தகைய அமைதியான சனிக்கிழமையின் பொருள் கைவிடுதல் அல்ல என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

## 2. தேவன் தமது ஆழமான கிரியைகளை இருளில் நடத்துகிறார்!

நாம் எதையும் காணாத நேரங்களிலேயே தேவன் மிகவும் வல்லமையாக செயல்படுகிறார்.



**தேவனின் படைப்பு**

**ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்.** ஆதியாகமம் 1:1,2.

இருள் எல்லாவற்றையும் மூடியது. ஆனால், ஆவியானவர் இன்னும் அசைவாடிக் கொண்டிருந்தார்.

காணப்படாதபோதும் அவர் கிரியை செய்து கொண்டிருந்தார்.

- உங்கள் ஜெபங்கள் பதிலளிக்கப்படாததாகத் தோன்றும்போதும்...
- உங்கள் முன்னேற்றம் தாமதமாகும் போதும்...
- உங்கள் இருதயம் காத்திருக்கும் போதும்...

தேவன் இன்னும் திரைக்குப் பின்னால் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்**. மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1990

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

பகிர்தல் (Share) (கலாத்தியர் 6:2), உதவி செய்தல் (Support) (ரோமர் 12:13) மற்றும் துரிதப்படுத்துதல் (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2026 ஏப்ரல் 19 முதல் 2026 மே 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஏப்ரல் 19 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் **யூடியூப் 5 நிமிட செய்திகள்** மூலம் எழும்புகிற சாட்சிகளுக்காக…

ஏப்ரல் 20 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருவதற்காக…

ஏப்ரல் 21 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள், விண்ணப்ப பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக…

ஏப்ரல் 22 ⇨ நமது சபை ஊழியங்கள், சிறுவர் ஊழியங்கள், வாலிபர் ஊழியங்கள், மருத்துவமனை ஊழியங்கள் போன்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

ஏப்ரல் 23 ⇨ நமது **அஞ்சல்வழி வேதாகமக்கல்வி** மற்றும் **இறையியல் கல்வி** ஆகியவற்றை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக…

ஏப்ரல் 24 ⇨ நமது ஊழியங்களில் தகுதியான புதிய ஊழியர்களை நியமிக்க வைத்த கிருபைக்காக…

ஏப்ரல் 25 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும், அவர்களது குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஏப்ரல் 26 ⇨ களப் பணியாளர்களின் மகத்தான அர்ப்பணிப்புக்காக…

ஏப்ரல் 27 ⇨ **அழைப்பின் எதிரொலி** யூடியூப் சேனல் மூலமாக, சந்திக்கப்படாத பன்மொழி மக்களை சந்திக்க வைத்த கிருபைக்காக …

ஏப்ரல் 28 ⇨ 2025–2026–ம் நிதியாண்டில் கர்த்தர் செய்த நன்மைகளுக்காக…

ஏப்ரல் 29 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக …

ஏப்ரல் 30 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** 10–ம் வகுப்பு மாணவர்களை நன்றாக தேர்வு எழுத வைத்த கிருபைக்காக…

மே 01 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் பாதுகாப்பு அளித்து வருகிற கிருபைக்காக…

மே 02 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்து வரும் கிருபைக்காக …

மே 03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** ஆண்டுவிழா சிறப்புற நடைபெற வைத்த கிருபைக்காக…

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

மே 04 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை தொடர்ந்து ஆசீர்வதிக்க வேண்டி…

மே 05 ⇨ நமது அனைத்து ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஒரு மனதுடனும், ஒற்றுமையுடனும் பணிபுரிய …

மே 06 ⇨ 2026–27–ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக…

மே 07 ⇨ 2026–27ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக…

மே 08 ⇨ நமது ஊழியத்தின் பொருளாதார தேவைகளை சந்திக்க வேண்டி…

மே 09 ⇨ நமது சுவிசேஷ அச்சகப் பணிகள் தங்குதடையின்றி நடப்பதற்காக…

மே 10 ⇨ உலக சபைகள் அனைத்தும் ஆத்தும ஆதாயம் செய்து எழுப்புதலைக் காண…

மே 11 ⇨ ஜூலை 04, 2026 அன்று நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற வேண்டி…

மே 12 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய வல்லமைகளிலிருந்தும் தொடர்ந்து தேவபாதுகாப்பு அளிப்பதற்காக…

மே 13 ⇨ ஊழியங்கள் மற்றும் மிஷனரிகளுக்கு எதிரான வன்முறைகள் தடுக்கப்பட வேண்டி…

மே 14 ⇨ உலகில் நிலவும் மோசமான பருவகால மாறுதலில் இருந்து தேவ பாதுகாப்பு கிடைத்திட வேண்டி…

மே 15 ⇨ இந்த புதிய நிதியாண்டில் (2026–27) தேவனுடைய வழிகாட்டுதல் கிடைத்திட வேண்டி…

மே 16 ⇨ இந்தியாவில் நடைபெற உள்ள தேர்தலில் கர்த்தருக்கு சித்தமான தேவபயமுள்ள தலைவர் வரவேண்டி…

மே 17 ⇨ நமது வட இந்திய மிஷனரிகளுக்காகவும், ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது உடல்நலத்திற்காகவும் …

மே 18 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூ டியூப் சானலில் புதிய subscribers அதிகரிப்பதற்காக …

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

அமைதியான சனிக்கிழமையில் சீஷர்கள் துக்கம் அனுசரித்தபோது, இயேசு செயலற்றவராக இல்லை. வேதம் அவரை பின்வருமாறு வெளிப்படுத்துகிறது.

- **பூமியின்கீழ் பகுதிகளுக்கு இறங்கினார்** (எபேசியர் 4:9)
- **துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டார்.** (கொலோசெயர் 2:15)
- **மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களை எடுத்துக் கொண்டார்.** (வெளிப்படுத்துதல் 1:18)

உலகம் அமைதியைக் கண்டது.

பரலோகம் வெற்றியைக் கண்டது.

தேவன் மௌனமாக இருப்பதாக நீங்கள் உணரலாம். ஆனால், உறுதியாக இருங்கள். உங்களுடைய வெற்றிகரமான ஞாயிற்றுக்கிழமையை ஆயத்தப்படுத்த அவர் உங்கள் இருண்ட சனிக்கிழமைகளில் கிரியை செய்கிறார். என் அன்பான சகோதர, சகோதரிகளே! மௌனமும், இருளும் தேவன் செயல்படவில்லை என்று அர்த்தமல்ல.

யோனா மீனின் வயிற்றில் மூன்று இருண்ட நாட்களைக் கழித்தார். அவை தண்டனையாக உணரப்பட்டன. ஆனால், உண்மையில் அந்த நாட்கள் ஒரு அற்புதத்திற்காக ஆயத்தமாயிருந்தன. ஒரு பெரிய பணிக்காக அவரது இருதயத்தை தேவன் திடப்படுத்திக் கொண்டு இருந்தார்.

தானியேல் சிங்கங்களின் குகையில் ஒரு அமைதியான இரவைக் கழித்தார். **ஆனால், ஆண்டவர் சிங்கங்களின் வாயைக் கட்டுவதில் மும்முரமாக இருந்தார்.** (தானியேல் 6:22) ஆண்டவர் உங்களுக்கு எதிராக எழும் ஒவ்வொரு வாயையும், ஒவ்வொரு எதிர்மறையான திட்டத்தையும், ஒவ்வொரு அம்பையும் நிர்மூலமாக்கிக் கொண்டிருக்கிறார். அவர் இருளிலும் கிரியை செய்கிறார்.



**தானியேல் சிங்கங்களின் குகையில் ஒரு அமைதியான இரவைக் கழித்தார்.**

### 3. சனிக்கிழமை என்பது ஆதாரமின்றி நம்புவதற்கு நமக்குக் கற்றுக் கொடுக்கிறது!

ஞாயிற்றுக்கிழமையின் விசுவாசம் கொண்டாட்டம்;

ஆனால், சனிக்கிழமையின் விசுவாசம் ஒப்புக் கொடுத்தல் அல்லது சரணடைதல்.

சனிக்கிழமையின் நம்பிக்கை என்பது:

- நான் இன்னும் அதைப் பார்க்கவில்லை; ஆனால், தேவன் உண்மையுள்ளவர்
- நான் இன்னும் அதை உணரவில்லை. ஆனால், அவருடைய வாக்குத்தத்தம் நிலைத்திருக்கிறது.
- எனக்கு இன்னும் அது புரியவில்லை. ஆனால், கர்த்தர் இன்னும் நல்லவரே!

ஆபிரகாம் ஈசாக்கிற்காக காத்திருந்தார். தேவன் அவருக்கு ஒரு மகனை வாக்குப் பண்ணியிருந்தார். ஆனால், பல ஆண்டுகள் அமைதியாக கடந்து விட்டன. ஆனால் **தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்** ... ரோமர் 4:20. சனிக்கிழமை போன்ற அமைதியான காலங்கள் அசைக்க முடியாத விசுவாசத்தை உருவாக்குகின்றன. ஆபிரகாமுக்கு இவ்வளவு அசைக்க முடியாத விசுவாசம் இருப்பது எளிது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உயிரியல் ரீதியாக அது சாத்தியமற்றது. இது தேவனுடைய வாக்குறுதியா அல்லது உங்கள் இருதயத்தின் எண்ணங்களா என்று மக்கள் கேட்டிருக்கலாம். அவர் சாராளைப் பார்க்கும் ஒவ்வொரு நாளும், அவரது இருதயம் நம்பிக்கையின்றி மூழ்கியிருக்கும். ஆனால், அவர் தேவனின் வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டார்.

கண்களால் பார்ப்பதால் உங்கள் விசுவாசத்தைத் தடுமாற விடாதீர்கள். நீங்கள் மாம்சகண்களால் வாடிப்போன சாராளைக் காண்பீர்கள். ஆனால், அதை ஆவிக்குரிய கண்களால் பார்க்க வேண்டும். வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர். அதை அவர் நிச்சயமாக நிறைவேற்றுவார். அதனால்தான், ஆபிரகாமின் சனிக்கிழமை அனுபவம் உலக வரலாற்றை வடிவமைத்த ஒரு அதிசயத்தில் முடிந்தது.

அன்பான நண்பர்களே! உங்களுக்கு ஆதாரம் ஒன்றும் தேவையில்லை. அவரை நம்புங்கள். அவரைப் பற்றிக் கொள்ளுங்கள். அவர் உங்கள் சனிக்கிழமையை ஒரு அற்புதத்துடன் முடிப்பார். உங்கள் சனிக்கிழமைகள் விசுவாசத்தின் வேர்களை வளர்க்க உதவும்.

### 4. சனிக்கிழமை நம்மை உயிர்த்தெழுதலுக்கு ஆயத்தப்படுத்துகிறது!

ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருக்கும் மாபெரும் அற்புதத்திற்கான ஆயத்த நாளாக சனிக்கிழமை இருக்கிறது என்பதை நம்மில் பலர் அடிக்கடி மறந்துவிடுகிறோம். ஞாயிற்றுக்கிழமை மிக விரைவாக வந்தால், காத்திருப்பு ஏற்படுத்தும் மாற்றத்தை நாம் இழந்துவிடுவோம். சனிக்கிழமை நம்மை உருவாக்குகிறது மட்டுமல்லாமல், அது நம்மை ஆழப்படுத்துகிறது; பலப்படுத்துகிறது; நம் நோக்கங்களை தூய்மைப்படுத்துகிறது.

தாவீது பதினேழு வயதில் ராஜாவாக அபிஷேகம் செய்யப்பட்டார் (1 சாமுவேல் 16).

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
Diploma in Theology &
Bachelor of Theology
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
& (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
17. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
20. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
21. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
22. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
23. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
24. இந்தி ஆராதனை – புதன் இரவு 7.00 மணி
25. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
26. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
27. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
28. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
29. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
30. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
31. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
32. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
33. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
34. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
35. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
36. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி


தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## மெய்யான தேவனின் அழைப்புக்கு உண்மையுள்ளவராயிருங்கள்!

தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். ~1 கொரிந்தியர் 1:9



1969—ஆம் வருடம் நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவுடன், மூன்று வருட காலம், காலஞ்சென்ற அருமை தேவ ஊழியர் 'வருகையின் தூதன்' பத்திரிகை ஆசிரியரான போதகர் எஸ். தேவதாசன் அவர்கள் என்னைத் தம்முடன் ஊழியத்தில் சேர்த்து எனக்குப் பல்வேறு விதங்களில் ஆவிக்குரிய ஊழியப் பயிற்சி அளித்தார்கள்.

ஒரு முறை நான் அவர்களுடன் இரவு நேரத்தில் அதிக நேரமாக ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று என்னிடம் வருங்காலத்தில் உலகம் எப்படி இருக்கப் போகிறது என்பதையும், என்னைக் கொண்டு தேவன் என்னென்ன காரியங்களைச் செய்யப்போகிறார் என்பதையும் என்னிடம் விளக்கிக் கூறினார்கள். அவர்கள் என்னிடம் சொன்னக் காரியங்கள் எனக்கு மிகப் பெரியவைகளாயிருந்தன. அவற்றை நான் கொஞ்சம் கூட எண்ணிப் பார்க்கக்கூடாத நிலையில் அப்போது இருந்தேன். இவர்கள் சொன்ன காரியங்களுக்கு ஏற்ற கல்வித் தகுதியோ, பணபலமோ, ஆள்பலமோ என்னிடம் சற்றேனும் இல்லாதிருந்தது.

இப்படியாக என்னுடைய இயலாமைகளையும், என்னிடம் இல்லாதவைகளையும் அவர்களிடம் "ஐயா, நான் கடைசிவரை ஓர் அடித்தளத்தில் ஊழியம் செய்யும் கடைநிலை ஊழியனாக இருந்தால் போதும்" என்று எடுத்துச் சொன்னேன். அப்போது அவர்கள் ஒன்றுமில்லாத ஒரு மனிதனை மிக உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லத் தேவையான இரண்டு காரியங்கள் உள்ளன. அதாவது 1 தீமோத்தேயு 1:18 இல் சொல்லப்பட்டுள்ள படி, **நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு**, இவை இரண்டையும் உன் இரண்டு கண்களைப் போல பாதுகாத்துக் கொள்வாயானால் நான் உன்னிடம் இப்போது சொன்ன அனைத்து ஆவிக்குரிய உயர்வுகளும் உனக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். நானும் இந்த இரண்டு காரியங்களிலும் என்னால் இயன்ற மட்டும் கவனமாயிருக்க தேவன் உதவி செய்தார்.



இன்று, இந்தச் செய்தியை எழுதுவதற்கு சற்று நேரத்திற்கு முன் தேவன் என்னோடுப் பேசினார். அவருடைய மெல்லிய சத்தத்தை நான் கேட்டு தேம்பித் தேம்பி சத்தமிட்டு அழுதேன். அவர் என்னிடம், "என் மகனே இப்போது சற்று சிந்தித்துப் பார். நீ நிற்கும் இந்தக் கட்டிடம் உனக்கு எப்படிக் கிடைத்தது? இதில் இந்த நேரத்தில் நடக்கிற ஊழியங்களை நினைத்துப் பார். கட்டிடத்தின் தரைப் பகுதியில் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் இக்காலத்து தொழில் நுட்பத்தில் செயல்படும் எனது சுவிசேஷ அச்சகத்தைப் பார், முதல் மாடியில் எனது ஆலயத்தில் ஒரு புறத்தில் 24 மணி நேர ஜெப ஊழியமும், அடுத்தப் புறத்தின் ஒரு பகுதியில் **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** வகுப்பும், மற்றப் பகுதியில் கல்லூரியில் படிக்கும் வாலிபப் பெண்களுக்கான ஊழியமும், இரண்டாம் மாடியில் **அழைப்பின் எதிரொலி** ஊழிய அலுவலகமும் நடைபெறுவதை நீ சிந்தித்தது உண்டா?

உன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்டக் காரியங்களை நிறைவேற்ற அவ்வப்போது, உனக்கு உதவி செய்ய விவேகத்திலும், யுக்தியிலும் உன்னைவிடத் தேறின ஆரோன்களையும், யோசுவாக்களையும் எழுப்பி உன்னை எவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கிறேன். இவற்றையெல்லாம் நீ சரியானபடி சிந்திக்காவிட்டாலும், நான் உன்மேல் சிந்தனையாயிருக்கிறேன். உன்னை நான் அழைக்கும் போது நீ எப்படி இருந்தாய்? இப்போது எப்படி இருக்கிறாய்? உன் மூலம் நான் நிறைவேற்றி வரும் ஊழியங்களின் எல்லைகளை இன்னும் நான் விரிவாக்குவேன். என் ஊழியக்காரர் போதகர் எஸ். தேவதாசன் உனக்குக் கற்பித்தப் படி, கடைசி மட்டும் உன்னுடைய விசுவாசத்தையும், நல்மனச்சாட்சியையும் காத்துக் கொள். உன் வாழ்க்கைப்பாதை கரடுமுரடும் கடினமானதாகவும் இருந்தாலும் சோர்ந்து போகாதே, உன்னை அழைத்தவர் நான் அல்லவா? நான் வாக்கினால் உன்னோடு உரைத்தவற்றை என் கரத்தினால் நிறைவேற்றுவேன். எதைக் குறித்தும் சோர்வடையாமல் திடமனதாயிரு, மகனே" என்று பேசினார்.



கர்த்தர் என்னோடு இருந்து செய்யும் காரியங்களை என்னால் புரிந்துக் கொள்ளவே முடியவில்லை. இந்தச் செய்தியைப் படிக்கும் என் சகோதரனே, சகோதரியே, நீங்களும் உலகப் போக்கிலேப் போகாதபடி தேவன் உங்களை வைத்திருக்கிற தலைமைத் துவத்திற்குக் கீழ்ப்படிந்து, அடங்கி, விசுவாசத்துடனும், நல்மனசாட்சியுடனும் நடந்து கொள்ளுங்கள். அப்படியானால் நிச்சயமாகவே தேவன் உங்களைக் கொண்டும் மகாப் பெரிய காரியங்களைச் செய்வார். தேவன் உங்களைக் கொண்டும் செய்ய நினைத்த காரியங்கள் ஒருபோதும் தடைபடாது. அவருக்கே மகிமையையும், கனத்தையும் செலுத்துகிறேன்.

************

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், அவர் உண்மையில் முப்பது வயதில்தான் ராஜாவானார்.

**தாவீது ராஜாவாகும்போது, முப்பது வயதாயிருந்தான்; அவன் நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்.** (2 சாமுவேல் 5:4)

தாவீது நீண்ட காலம், பொறுமையாக சகித்த ஆண்டுகள், இஸ்ரவேலின் மிகப்பெரிய ராஜாவாக அவரை ஆயத்தப்படுத்தின ஆண்டுகளாயிருந்தன. தாவீது ராஜாவின் சாதனைகள் அசாதாரணமானவை; வேறு எந்த ராஜாவும் அவர் செய்ததைச் சாதிக்கவில்லை. அந்த காத்திருப்புக் காலம் அவருக்கு மனத்தாழ்மையைக் கற்றுக் கொடுத்தது. தனக்கு எதிராக சதி செய்தவர்களையும் மன்னிக்கக்கூடிய தைரியத்தை அவருக்கு கற்றுக் கொடுத்தது. அவரது வாழ்க்கையின் இராட்சதர்களை அசைக்க முடியாத தைரியத்துடன் எதிர்கொள்ள அவருக்கு மனஉறுதியை அளித்தது. அது அவரது குணத்தை வடிவமைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, பரிசுத்த ஆவியின் பிரசன்னமே அவரது மிகப்பெரிய பொக்கிஷம் என்பதை அவருக்குக் கற்பித்தது.

**'கர்த்தாவே, உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளிவிடாதேயும்'** சங்கீதம் 51:11.

**ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்.** சங்கீதம் 84:10.

இன்று நீங்கள் எதற்காகவோ காத்திருக்கிறீர்களா? அப்படியானால், தேவன் உங்களைப் பெரிய காரியங்களுக்கு ஆயத்தப்படுத்துகிறார் என்று அறிந்து கொள்ளுங்கள்.

பலங்கொண்டு, தைரியமாயிருங்கள். காத்திருங்கள்!

## 5. உங்கள் சனிக்கிழமை நீண்ட காலம் நிலைக்காது!

வல்லமை நிறைந்த உயிர்த்தெழுதலின் ஞாயிற்றுக்கிழமையை, தேவன் உறுதியளித்திருப்பதால், உங்கள் இருண்ட

- சனிக்கிழமைகள் நீண்ட காலம் நிலைக்காது.
- சனிக்கிழமையின் அமைதி தற்காலிகமானது.
- சனிக்கிழமையின் குழப்பம் தற்காலிகமானது.

**'... இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்'** ... என்று யோவான்2:19–ல் இயேசு கிறிஸ்து ஏற்கனவே அறிவித்திருந்தார்.



**'இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்'**

உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் கனமான கல் உருண்டுவிடும். ஒளி உங்கள் சனிக்கிழமைகளை உடைத்து, வாக்குத்தத்தம் எழும்; நீங்கள் கல்லறையிலிருந்து வெளியே வருவீர்கள். ஒரு சனிக்கிழமை இருந்தால், நிச்சயமாக ஒரு ஞாயிற்றுக்கிழமையும் உண்டு. லாசரு நான்கு நாட்கள் கல்லறையில் கிடந்தார். நான்கு நீண்ட நாட்கள் மௌனம், காத்திருப்பு மற்றும் முழுமையான நம்பிக்கையின்மை; எல்லாம் முடிந்துவிட்டது போல் தோன்றியது. ஆனால், இயேசு கிறிஸ்து உள்ளே நுழைந்தபோது, எல்லாம் மாறியது.

**இயேசு ... நீ விசுவாசித்தால் மகிமையைக் காண்பாய் ... என்றார்.** யோவான் 11:40.

அன்பான நண்பர்களே! இத்தகைய இருண்ட சனிக்கிழமைகள் பலவற்றை நான் கடந்து வந்திருக்கிறேன். நான் என்ன பேசுகிறேன் என்றும், அவை, எவ்வளவு பயமுறுத்தும் மற்றும் இருதயத்தை உடைக்கும் என்பதையும் நான் அறிவேன். அந்த நிலைகளில் இயேசு கிறிஸ்து உள்ளே நுழைந்து என் 'முற்றுப் புள்ளி'யை ஒரு 'கமாற்புள்ளி'யாக மாற்றும் வரை கிட்டத்தட்ட நான் நம்பிக்கையை இழந்திருக்கிறேன். அவர் எனக்கு அப்படி செய்திருப்பதினால், உங்களுக்காகவும் அவர் அதைச் செய்வார். அவமானம், தோல்வி, துக்கம் நிறைந்த உங்கள் வாழ்க்கை விரைவில் முடிவுக்கு வரும். உங்கள் சனிக்கிழமை உங்கள் வாழ்க்கைப்பாதையின் முடிவு அல்ல.

நம் வாழ்க்கைக்கு ஒரு நோக்கத்தையும், அர்த்தத்தையும் கொடுக்க இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். நாம் பாவத்திலோ, தோல்வியிலோ வாழ வேண்டும் என்று அவர் ஒருபோதும் விரும்பவில்லை. நாம் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்காக அவர் வந்து நமக்காக சிலுவையில் மரித்தார். நாம் இனி எதற்கும் அடிமைகள் அல்ல. நாம் முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள்.

நீங்கள் இதுபோன்ற ஒரு சனிக்கிழமையின் நிலையில் அதாவது, காத்திருத்தல், வேதனை, துக்கம் போன்ற நிலைகளில் இருந்தால் தைரியம் கொள்ளுங்கள். சனிக்கிழமையின் மௌனத்தை ஞாயிற்றுக் கிழமையின் வெற்றியாக மாற்றிய அதே தேவன் இப்போது உங்கள் வாழ்க்கையில் செயல்படுகிறார்.

சனிக்கிழமையின் மௌனம் உயிர்த்தெழுந்த ஞாயிற்றுக்கிழமையின் வெற்றியைப் போலவே சக்தி வாய்ந்தது. தேவனையும், அவரது வாக்குத்தத்தங்களையும் பற்றிக்கொள்ளுங்கள். உங்கள் ஞாயிற்றுக்கிழமை வந்து கொண்டிருக்கின்றது. ஆனால், உங்கள் அமைதியான சனிக்கிழமைகளை குறைத்து மதிப்பிடாதீர்கள். இயேசு கிறிஸ்துவை நம்புங்கள். அவரால் மட்டுமே உங்கள் அமைதியான சனிக்கிழமைகளை வெற்றிகரமான ஞாயிற்றுக்கிழமைகளாக மாற்ற முடியும். சீக்கிரமாய் வரப்போகின்ற ராஜா அவரே!

*தேவன் அமைதியாக இருக்கலாம்; ஆனால் அவர் ஒருபோதும் செயலற்றவராக இருப்பதில்லை.*

*அவர் மறைந்திருக்கலாம்; ஆனால், ஒருபோதும் இல்லாதவராக இருப்பதில்லை.*

*அவர் அமைதியாக இருக்கலாம்; ஆனால், அவர் எப்போதும் உண்மையுள்ளவராக இருக்கிறார்.*

*************

## அறிவிப்பு

ஜூலை 4, 2026 சனிக்கிழமை அன்று 5.00 மணிக்கு சென்னை பாலர் கல்வி நிலையத்தில் நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழா நடைபெறவிருக்கிறது.

சிறப்பு விருந்தினர்:

**Rev. Dr. S.J. கிங்ஸ்லி அவர்கள்,**
**(COO, JESUS CALLS)**

நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின் 2026–2027 கல்வி யாண்டுக்கான வகுப்புகள் வரும் ஜூன் 1–ம் தேதி 2026 (திங்கட்கிழமை) முதல் தொடங்கவிருக்கிறது. ஆகவே, நமது கல்லூரிக்கு அர்ப்பணிப்புள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

– கல்லூரி முதல்வர்

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– ஆசிரியர்

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **S. Sam Selva Raj** |
| A/C No. | : **1023 2934 679** |
| IFSC | : **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | |
|---|---|
| Branch | : **Anna Salai, Chennai-6** |
| Name | : **Echo of His Call** |
| A/C No. | : **6038 0502 2319** |
| IFSC | : **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | |
|---|---|
| Branch | : **Triplicane, Chennai-5** |
| Name | : **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : **1023 2923 805** |
| IFSC | : **SBIN 00 00 249** |

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
**E.mail : sam@echoofhiscall.org**

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**☆ வருட சந்தா ரூ. 100/–** **☆ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல் (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th MARCH 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

GOD BLESS YOU!

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**